இருக்காது. காரணம், 500 சதுரடி, 1,000 சதுரடியில்தான் அந்தக் கட்டடங்கள் இருக்கும். எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, அந்த ஒன்றிய அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது தொடர்பான மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை உடனடியாக ஆய்வு செய்து, கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 50, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

50—

வீடுகள்

***7707—திரு. மு. முருகன்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதுகுளத்தூர் தொகுதி, முதுகுளத்தூர் பேரூராட்சியிலுள்ள குடிசை வீடுகளுக்குப் பதிலாக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது சாத்தியக் கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள்.

திரு. மு. முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத்தை ஆளுகின்ற ஆற்றல் பெற்றிருக்கும் இந்தியத் திருநாட்டின் இதய தெய்வம்; வாழும் மனித தெய்வம்; (மேசையைத் தட்டும்

ஒலி) இளைய சமுதாயத்தின் காவல் தெய்வம்; கழகத்தின் நிரந்தர பொதுச் செயலாளர்; தமிழ்நாடு முதலமைச்சர்; எல்லையில்லா கருணை, ஆழ்ந்த அறிவாற்றல், தளர்வுறாத துணிவு, அசையாத உறுதி கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி பாதம் தொட்டு வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதுகுளத்தூர் தொகுதி, முதுகுளத்தூர், கமுதி மற்றும் சாயல்குடி பேரூராட்சிகளில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் நீண்ட, நெடு நாட்களாகவே குடிசை வீட்டில் வாழக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கின்றது. IAY திட்டத்திலோ அதாவது இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்திலோ அல்லது பசுமை வீடுகள் வழங்கும் திட்டத்திலோ வீடுகள் கட்டிக் கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலை இருப்பதால், அவர்களுக்குத் தனி வீடுகளோ அல்லது அடுக்குமாடிக் கட்டடங்களோ கட்டித் தர வேண்டுமென்பது அவர்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கோரிக்கையை கனிவோடு பரிசீலித்து, பசுமை வீடுகள் வழங்கும் திட்டத்திலாவது அந்தப் பகுதி மக்களுக்கு வீடுகள் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக 12-வது நிதிக் குழு மற்றும் 13-வது நிதிக் குழு நிதியின் மூலமாகத்தான் பேரூராட்சிகளில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. உள்ளாட்சித் துறையின் மூலமாக பசுமை வீடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் கிராமங்களில்தான் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. 13-வது நிதிக் குழு 300 கோடி ரூபாய் நிதி அனுமதி அளித்துள்ளது. அந்த நிதி பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்ட செலவிடப்பட்டிருக்கிறது. இப்போது 2015-2020 ஆம் ஆண்டுக்குள் வீடுகள் கட்டித் தருவதற்கு 14-வது நிதிக் குழுவில் 7,150 கோடி ரூபாய் நிதி கோரப்பட்டுள்ளது. கோரிய நிதி கிடைத்தவுடன், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 பிப்ரவரி 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள்.*

திரு. மு. முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை, ஏற்று 14-வது நிதிக் குழு நிதி கிடைத்தவுடன் வீடுகள் கட்டித் தரப்படும் என்று வாக்குறுதி அளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

முற்பகல் 10-30

திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பூர் தொகுதி, 37-வது வட்டம், எம்.கே.பி. நகரில் 6 ஆண்டுகளுக்கு முன்னால் ஏற்பட்ட ஒரு தீ விபத்தில் 175-க்கும் மேற்பட்ட குடிசைகள் எரிந்து நாசம் ஆயின. அதில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அதே இடத்திற்குப் பக்கத்தில், ஒரு சமூக நலக் கூடத்தில் தற்காலிகமாக இடம் ஒதுக்கப்பட்டு, அவர்கள் குடியிருந்து வருகிறார்கள். கிட்டத்தட்ட 6, 7 ஆண்டுகளாக எந்தவிதமான அடிப்படை வசதியும் இல்லாமல், கடுமையான சூழ்நிலையிலே அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இப்போது மீண்டும் தீ விபத்து அபாயம் அவர்களை விரட்டிக் கொண்டிருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு மாற்று இடம் ஏதாவது ஒதுக்கப்பட்டு, அவர்களுக்கு விரைவில் கொடுக்கப்படுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996 ஆம் ஆண்டு, மகாகவி பாரதியார் நகரில் வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான சுமார் 9 கிரவுண்ட் நிலத்தினை 175 குடும்பங்கள் ஆக்கிரமிப்பு செய்திருந்தன. 2006-ல் அங்கு தீ விபத்து ஏற்பட்டது. அதனால் தற்காலிகமாக அவர்கள் வீட்டு வசதி வாரியத்தினுடைய சமூக நலக் கூடத்தில் தங்க வைக்கப்பட்டார்கள். அவர்கள் தங்களுக்கு வீடு வேண்டுமென்று சாலை மறியல் செய்தார்கள். குடிசை மாற்று*

வாரியத்தில் தற்போது குடியிருப்புகள் J.N.N.U.R.M. திட்டத்தின்கீழ், துரைப்பாக்கம் மற்றும் பெரும்பாக்கம் பகுதிகளில் கட்டப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தின்கீழ், வீடு ஒதுக்கீடு செய்ய பயனாளிகளைக் கண்டறிந்து தெரிவிக்கும்படி வாரியம் சென்னை மாநகராட்சியைக் கேட்டுக் கொண்டுள்ளது. சென்னை மாநகராட்சிமூலம் பயனாளிகளைத் தேர்வு செய்து, அடையாள அட்டை — Bio-metric card — வழங்கினால் அவர்களுக்குக் குடிசை மாற்று வாரியம்மூலம் ஒக்கியம் துரைப்பாக்கம் அல்லது பெரும்பாக்கம் பகுதிகளில் வீடுகள் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் சிறப்பாகச் செயல்படுத்தப்படுகின்ற பசுமை வீடுகள் திட்டத்தின் மூலமாக தமிழகம் முழுவதும் கிராமப்புறங்களில் இருக்கின்ற வீடுகளெல்லாம், இன்றைக்கு கான்கிரீட் வீடுகளாக மாறியிருக்கின்றன. ஆனால் இன்றைக்குத் தமிழகம் முழுவதும் இருக்கின்ற பேரூராட்சிப் பகுதிகளில், மனிதன் குடியிருப்பதற்கே லாயக்கற்ற சிறிய அளவிலான வீடுகளும், பெரும்பாலும் குடிசை வீடுகளும் இருக்கின்றன. எனவே, கிராமங்கள்தோறும் பசுமை வீடுகள் கட்டிக் கொடுக்க கணக்கெடுக்கும்போது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு அதை எடுத்துச்சென்று, பேரூராட்சிப் பகுதிகளில் குடிசைகளாக இருக்கின்ற அந்த வீடுகளையும் வீட்டு வசதித் துறையின் மூலமாக புது வீடுகளாகக் கட்டுவதற்கு, இந்த ஆண்டு முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் வசித்து வருகின்ற குடிசைவாசிகள் பற்றிய கணக்கெடுப்புகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாநகராட்சிப் பகுதிகளில் J.N.N.U.R.M., R.A.Y. போன்ற திட்டங்களின்கீழ் மத்திய

2014 பிப்ரவரி 17]

அரசு நிதியின் மூலமாகவும், மாநில அரசின் பங்களிப்புடனும் குடிசை மாற்று வாரிய வீடுகள் கட்டப்படுகின்றன. நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் 12-வது நிதிக் குழு, 13-வது நிதிக் குழுவின் நிதியினைப் பெற்றும் குடிசை மாற்று வாரியத்தால் வீடுகள் கட்டப்பட்டன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 14 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில், குடிசை மாற்று வாரிய வீடுகள், நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் கட்டுவதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு, 14-வது நிதிக் குழுவில் 7,150 கோடி ரூபாய் அளவிற்கு நிதி கேட்டிருக்கிறார்கள்; மாநில அரசின் பங்கு 7,150 கோடி ரூபாய். கிட்டத்தட்ட 14,300 கோடி ரூபாயில் வீடுகள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது. 2015-2020-ல் அதற்கான நிதி கிடைத்தால், நடவடிக்கை எடுக்கப்படும். அப்போது மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஆய்வு செய்து பேரூராட்சி, நகராட்சிகளில் அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 51, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

51—

தக்காளிக் கூழ் தொழிற்சாலை

***7500—திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி தொகுதி, பொள்ளாச்சியில் தக்காளிக் கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பொள்ளாச்சி தொகுதி, பொள்ளாச்சியில் தக்காளிக் கூழ் தயாரிக்கும் தொழில் நிறுவனம் தொடங்குவது